
# வீதி ஒழுங்கு நூல்



மோட்டார்ப் போக்குவரத்துத்
திணைக்களம்

மோ.போ.ஆ. 165

# பெருந்தெருக் கோவை

1994

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

2-

PP 013705

## போக்குவரத்து அமைச்சரின் செய்தி

பெருந்தெருக் கோவை ஒழுங்குவிதிகள் (1951) பிரசுரிக்கப்பட்டதிலிருந்து இலங்கையின் மோட்டார் போக்குவரத்தில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பதிவு செய்யப்பட்ட வாகனங்களினதும் சாரதி அனுமதிப்பத்திர உரிமையாளர்களினதும் எண்ணிக்கை, கடந்த பத்து வருட கால எல்லைக்குள் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இதன் விளைவாக வீதிகளில் வீதிப் பாதுகாப்பு, மற்றும் போக்குவரத்து முகாமைத்துவம் போன்ற துறைகளில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் வீதிப் பாதுகாப்பும் போக்குவரத்து முகாமைத்துவமும் எனும் விடயமானது சர்வதேச நிறுவனங்களால் மட்டுமன்றி இந்நாட்டின் அரசாங்க, மற்றும் அரச சார்பற்ற சங்கங்களாலும் தீர்க்கமான ஆராய்ச்சிக்குட்பட்டிருந்தது. தற்போதைய முயற்சி, அத்தகைய ஆராய்ச்சியின் விளைவே ஆகும். இதன் காரணமாக, வீதிகளில் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கவும் விபத்துக்களைக் குறைக்கவும் பெருமளவில் முடியுமெனஎதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னைய பெருந்தெருக் கோவையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல தடவைகள் மீள அச்சிடப்பட்டுள்ளது, என்பது ஊக்கமளிப்பதாயுள்ளது. வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றிப் பொதுமக்கள் அறிந்துள்ளார்களென்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். இப்பெருந்தெருக் கோவையை முறையாக அறிந்து முழுமையாகப் பின்பற்றுவதன் மூலம் அரசுடனும் ஏனைய ஒவ்வொருவருடனும் ஒத்துழைத்து விபத்துக்களைத் தடுத்து வீதிப் பாதுகாப்பின் தராதரத்தினை உயர்த்துமாறு சகல வீதிப் பாவனையாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

## உள்ளடக்கம்


| | | இல. |
|---|---|---|
| 1. பாதசாரிகள் | | 5 — 13 |
| 2. மிதிசைக்கிள் ஓட்டுனர் | | 14 — 22 |
| 3. மோட்டார் வாகனம் செலுத்துவோர் — | | |
| பொது | ... | 23 — 49 |
| சந்தியில் | ... | 50 — 65 |
| முந்திச் செல்லல் | ... | 66 — 71 |
| நிறுத்தல் | ... | 72 — 77 |
| பின்னேக்கிச் செலுத்தல் | ... | 78 |
| கோளாறுகளும் விபத்துக்களும் | ... | 79 — 85 |
| 4. சைகைகளும் வீதிக் குறியீடுகளும் | | வரைபட இல. |
| அபாய எச்சரிக்கைக் குறியீடுகள் | | 01 — 34 |
| ஒழுங்குபடுத்தும் சைகைகள் | | |
| தடைசெய்யும் சைகைகள் | ... | 35 — 53 |
| மட்டுப்படுத்தும் சைகைகள் | ... | 54 — 59 |
| கட்டாயச் சைகைகள் | ... | 60 — 66 |
| முந்துரிமைச் சைகைகள் | ... | 67 — 73 |
| | | 120 — 121 |
| சாரதிகளுக்குப் பயனுள்ள வேறு சைகைகள் | ... | 74 — 82 |
| வீதியிற் குறியீடுகள் | ... | 83 — 109 |
| 5. தகவல் தரும் சைகைகள் | | |
| முன்னரே நெறிப்படுத்தும் சைகைகள் | ... | 110 — 114 |
| திசைகாட்டும் சைகைகள் | ... | 115 — 119 |

## பெருந்தெருக் கோவை

1. 1987.03.13 ஆந் தேதிய அதிவிசேட அரசாங்க வர்த்தமானியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகள், சைகைகள் என்பனவற்றின் சாதாரண குடிமகனின் மொழியிலமைந்துள்ள சுருக்க மான வடிவே பெருந்தெருக் கோவையாகும்.

2. பாதசாரிகளாக
மிதிசைக்கிள் ஓட்டுபவராக
மோட்டார் வாகனம் செலுத்துபவராக
வீதியை உபயோகிப்போரை வழி நடாத்துவதற்கு முறையாகக் காணப்படும் பணிப்புக்கள் இக்கோவையில் உள்ளடங்கியுள்ளது.

3. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் விதிக்கப்பட்ட போக்குவரத்துச் சைகை கள், கைந்நூலின் முடிவில் காணப்படுவதுடன் வீதிச் சைகைகளும் வீதிக் குறியீடுகளும், அதாவது அபாய எச்சரிக்கைச் சைகைகள், ஒழுங்குபடுத்தும் சைகைகள், தகவல் தரும் சைகைகள் என்பவற்றை யும் உள்ளடக்குகின்றது.

4. சகல வீதிப் பாவனையாளர்களும் பெறுமதிமிக்க வீதிப் பரப்பின் பாவனைக்கும் அதன் பாதுகாப்புக்கும் உதவுமுகமாக ஒழுக்கநெறியினை கடைப்பிடிப்பதனை உறுதிப்படுத்துவதற்காகவே இவ்வொழுங்குவிதி கள் அமைக்கப்பட்டன.

சகல வீதிப் பாவனையாளர்களினதும் ஒத்துழைப்பு வேண்டப்படுவ துடன் இவ்விதிகளைக் கடைப்பிடித்தல் தங்கள் நலன்கருதியே என்பதனை உணர்ந்து கொள்ளுதல் முக்கியமாகும்.

## பாதசாரிகள்

5. சிறுவர்களை வீதிகளில் விளையாட அனுமதிக்க வேண்டாம். சிறுவர் களுடன் நடக்கும்பொழுது எப்பொழுதும் வாகனங்கள் வரும் வழியி லிருந்து அவர்களை விலத்துங்கள். சிறுவயதிலிருந்தே வீதிப் பாதுகாப் புப்பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தி, எப்பொழுதும் அவர்களுக்கு முன்மாதிரியாகவும் திகழுங்கள்.

6. பக்க நடைபாதை அல்லது ஒற்றையடிப் பாதை இருப்பின், எப்பொழுதும் அதனையே உபயோகியுங்கள். நடைபாதை இல்லாதிருப்பின் வாகனப் போக்குவரத்தை எதிர்நோக்கி, வீதியின் வலது பக்கமாக நடவுங்கள்.

7. இயன்றளவு வீதியின் பாவனையை வாகனப் போக்குவரத்திற்கென ஒதுக்குங்கள். அத்துடன் நடக்கும்பொழுது ஒருவர்பின் ஒருவராக நடத்தல் உசிதமானது. ஆனல் பாதசாரிக் கடவைகளிலும் பக்க நடைபாதைகளிலும் தவிர இருவருக்கு மேல் பக்கம் பக்கமாக நடக்காதீர்கள். பாதசாரிகள் வாகனப் போக்குவரத்திற்கு வழிவிடல் வேண்டும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

8. இரவில், விசேடமாக ஒற்றையடிப்பாதை இல்லாதவிடத்து மென்னிற ஆடை அணியுங்கள். அல்லது வெள்ளை நிறப்பொருளொன்றினை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். இது வெளிச்சம் குறைவான சமயங்களில் சாரதிகள் தாங்கள் இருப்பதை உணர்ந்து கொள்வதற்கு எளிதாயிருக்கும்.

9. வீதியைக் கடக்க வேண்டுமாயின், பாதசாரிக் கடவை (சைகை 83) அல்லது வீதியின் மேற்பாலம் அல்லது கீழ்ப்பால பாதசாரிக் கடவையை உபயோகியுங்கள். இவற்றின் ஏதாவதொன்றின் 50 மீட்டர் தூரத்திற்குள் தாங்களிருப்பின், குறிப்பிட்ட இவற்றிஞென்றின் வழியே வீதியைக் கடத்தல் வேண்டும். பாதசாரிக் கடவையிலன்றி வளைவு நெளிவுப் பகுதியில் கடத்தல் ஆகாது.

10. ஒதுக்கப்பட்டுள்ள பாதசாரிக் கடவை இல்லாத பட்சத்தில் வாகனப் போக்குவரத்தின் நிலை பற்றித் தெளிவாக விளங்கிக்கொண்டு, கடக்முன், போக்குவரத்தில் பாதுகாப்பான இடைவெளியொன்று வரும் வரை காத்திருங்கள். வலது பக்கம் பார்க்கவும், இடது பக்கம் பார்க்கவும் ; மீண்டும் வலது பக்கம் பார்க்கவும். இப்பொழுது கடப்பது உசிதமானது என அறிந்ததும், வீதியின் குறுக்கே, நேராக விரைவில் கடவுங்கள். நிறுத்தப்பட்ட வாகனமொன்றின் பின்னே அல்லது முன்னே கடக்காதீர்கள். பாதுகாப்புக் கம்பிவேலிகள் போடப்பட்டிருக்கும் இடங்களில் வழங்கப்பட்டுள்ள இடைவெளிகளில் மட்டுமே வீதியைக் கடவுங்கள். கம்பி வேலிக்கு மேலால் ஏறவோ அல்லது அவற்றுக்கு வெளியே நடக்கவோ வேண்டாம்.

11. ஒற்றையடிப் பாதைகள் ஒடுங்கலாயுள்ள அல்லது இல்லாமலுள்ள சந்தியின் மூலையில் நடக்குகையில், விசேடமாக நீண்ட வாகன மொன்று மூலையிலிருந்து வரும்பொழுது கவனமாயிருங்கள்.

12. பாதசாரிக் கடவையில் வீதியைக் கடக்க தாங்கள் முயற்சிக்குமுன் (சைகை 83) வாகனச் சாரதி தங்களைக் கண்டு வேகத்தைக் குறைத்து வாகனத்தை நிற்பாட்டுவதற்கு போதுமான நேரத்தைக் கொடுங்கள். கடவையில் பாதத்தை வைத்தாலன்றி, சாரதி நிற்பாட்ட வேண்டிய தேவையில்லை. வெளிச்சம் குறைவாக இருந்தால் அல்லது வீதி ஈரமாக இருப்பின் மேலதிக கவனம் செலுத்துங்கள்.

13. வாகனப் போக்குவரத்தையும் பாதசாரிகளையும் கட்டுப்படுத்தும் பெலிகன் கடவையில் "சிவப்பு மனிதன்" சைகைக் குறியீடு (120) இருக்கும்பொழுது கடவாதீர்கள். இயக்குவதற்கான பொத்தானை அமுக்கி "பச்சை மனிதன்" (சைகை 121) ஒளியூட்டப்படும்வரை காத்திருங்கள். இப்பொழுது கவனமாகக் கடவுங்கள். ஏனெனில், ஒளிச் சமிக்ஞைகளின் பிரகாரம் வாகனப் போக்குவரத்து இயங்க, போதிய நேரம் தேவை. சற்று நேரத்தில் "பச்சை மனிதன்" ஒளிச் சமிக்ஞை விட்டுவிட்டெரியத் தொடங்கும். ஒளிச் சமிக்ஞை "சிவப்பு மனிதனுக்கு" விரைவில் மாறப் போகின்றதென்பது இதன் கருத்தாகும். "பச்சை மனிதன்" விட்டுவிட்டெரியும் போது தாங்கள் கடக்கத் தொடங்க வேண்டாம். ஆனல் இவ்வாறிருக்கும்போது தாங்கள் ஏற்கனவே கடந்து கொண்டிருப்பின், மற்றப் பக்கத்திற்குச் செல்லத் தங்களுக்கு போதுமான அவகாசம் இருக்கும். ஆனல் அவசரமாகவே கடத்தல் வேண்டும்.

13. (அ) ஒம்னிபஸ் ஒன்றில் ஏறத் தாங்கள் விரும்பின், சைகை 78 ஆல் அடையாளமிடப்பட்டுள்ள மிகக்கிட்டிய நிறுத்துமிடத்திற்குச் சென்று, கியூவரிசையில் தங்களுக்குரிய இடத்தில் நில்லுங்கள். கியூவரிசையை மீறுதல் குற்றமாகும். பஸ்வண்டியை ஏறுமுன் அல்லது பஸ் வண்டியிலிருந்து, இறங்குமுன், பஸ் நிறுத்துமிடத்தில் பஸ் நிற்பாட்டும் வரை காத்திருங்கள்.

## மிதி சைக்கிள்கள்

14. வீதியில் மிதி சைக்கிள் ஓட்டுவதற்கு தாங்கள் தகுதியுடையவரா என்பதனை உறுதிப்படுத்துங்கள். தங்கள் மிதி சைக்கிள் பொறிமுறையில் சீராக உள்ளதா என்பதனையும், இருக்கையும் கைப்பிடிச்சட்டமும் உங்களுக்கேற்ற உயரத்தில் உள்ளதா என்பதனையும் வருடாந்த அனுமதிப்பத்திரக் தகடு முக்கியமான இடத்தில் பொருத்தப்பட்டுள்ளதா என்பதனையும் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

15. இரவில் தங்கள் மிதி சைக்கிள் முன் பக்கத்தில் வெள்ளை விளக்கினையும் பின் பக்கமாக சிவப்பு விளக்கினையும் அல்லது சிவப்பு தெறிகருவியையும் கொண்டிருத்தல் வேண்டும். பின்பக்க சக்கர மட்பட்டை வெள்ளை நிறவர்ணம் பூசப்பட்டிருத்தல் வேண்டும். இருள் சூழத் தொடங்கியவுடனேயே விளக்குகளை ஒளியூட்டுங்கள். இரவில் மென்னிற ஆடை அணிவதன் மூலம் அணுகும் வாகனங்கள் தங்களை எளிதாகப் பார்க்கக் கூடியதாயிருக்கும்.

16. சைக்கிள் ஒழுங்கை வழங்கப்பட்டிருப்பின் அதனை உபயோகியுங்கள். ஆனால் சைக்கிள் ஒழுங்கை இல்லாவிடத்து, இடது நடைபாதைக் கருகாமையாகச் செலுத்துங்கள். எப்பொழுதும் ஒருவர் பின் ஒருவராகவே ஓட்டிச் செல்லுங்கள். ஒரு போதும் இரண்டிற்கு அல்லது அதற்கு அதிகமாக பக்கம் பக்கமாக ஓட்டிச்செல்லாதீர்.

17. கைச் சைகைகள் கொடுக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய வேளைகளிலும் திரும்பும் போதும் இரு கைகளையும் கைப்பிடிச்சட்டத்தில் வைத்திருங்கள். அத்துடன் ஏனைய வாகனங்களின் வேகத்தைக் கருத்திற் கொண்டு தங்கள் வாகனத்தைச் செலுத்துவதில் உறுதியாயிருங்கள். மிதி சைக்கிளின் முறையான கட்டுப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கக்கூடியதான எப்பொருளையும் கொண்டு செல்லாதீர்கள்.

18. சைக்கிள் ஓட்டும்போது நகர்ந்து கொண்டிருக்கும் இன்னோர் வாகனத்தை அல்லது ஓடிக்கொண்டிருக்கும் மற்றுமோர் சைக்கிள் ஓட்டுபவரை பிடிக்காதீர்கள்.

19. போக்குவரத்துக்கிடையே புகுந்து ஓ டாதீர்கள். வளைவு, நெளிவான விதத்தில் ஒட்டாதீர்கள்.

20. நிறுத்தப்பட்டிருக்கும் வாகனமொன்றினைக் கடந்து செல்லும்போது அதன் பிரயாணிகள் கவலையீனமாக வாகனத்தின் கதவுகளைத் திறப்பார்கள். அத்துடன் தங்களையும் நிறுத்தப்பட்ட வாகனத்தையும் முந்திக் கொண்டு ஏனைய வாகனங்கள் கூடிய வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கும். கவனமாயிருங்கள்.

21. சிறு வீதியொன்றிலிருந்து பிரதான வீதிக்குள் புகும்பொழுது மிகக் கவனமாயிருங்கள். பிரதான வீதிக்குள் புகுமுன்னர் எப்பொழுதும் வாகனத்தை நிறுத்துங்கள். பிரதான வீதியிலுள்ள வாகனங்களுக்கே செல்லும் உரிமை உண்டு.

22. ஒரு வழிப்பாதையில் அல்லது சுற்று வட்டத்தெருவில் போக்குவரத்துத் திசைக்கெதிராகச் செலுத்தலாகாது.

## மோட்டார் வாகன உடமையாளர்கள்

23. தாங்கள் தகுந்த நிலையிலிருந்தாலன்றியும் குடிபோதையிலிருக்கும் போதும் சோர்வாய் அல்லது உணர்ச்சிவசப்பட்டு இருக்கும்போதும் பிரயாணத்தை ஆரம்பிக்கவேண்டாம்.

24. தங்கள் வாகனம் பொறிமுறை ரீதியில் சீராயுள்ளதா என்பதனை உறுதிப்படுத்துங்கள். செலுத்தும் பொறிமுறைத் தடுப்புக்கள், டயர்கள், விளக்குகள், ஒலிக்கருவி, காற்றுத்திரைத் துடைப்புக்கள், சைகை ஒளிச் சமிக்ஞைகள் போன்றவற்றில் கூடிய கவனம் செலுத்துங்கள். ஆபரணம் அல்லது அது மாதிரியான அனுவசியமற்ற பொருட்களால் வீதியின் மீதான உங்கள் கட்புலன் இடைஞ்சலாயிருத்தலாகாது.

25. பெறுமதிவாய்ந்த சாரதி அனுமதிப் பத்திரத்தினையும் வரி அனுமதிப் பத்திரத்தினையும் தாங்கள் வைத்திருக்க வேண்டும் என்பதோடு குறைந்தது பிறநபர் காப்புறுதிப்பத்திரமேனும் வாகனத்தின் பேரில் பெற்றிருக்கவேண்டும்.

26. தாங்கள் சாரதிப் பயிற்சியாளராயின், அவ்வகுப்பு வாகனத்தைச் செலுத்தக் கூடிய அனுமதிப்பத்திரம் பெற்ற சாரதியொருவர் தங்களுக்கு அறிவுறுத்தவும் உதவவும் தங்கள் பக்கத்தில் அமர்ந் திருத்தல் வேண்டும்.

27. ஆசனப்பட்டிகள் தங்கள் வாகனத்திற்குப் பொருத்தப்பட்டிருப்பின் அவற்றை உபயோகிக்கவும், தங்கள் வாகனம் விபத்துக்குள்ளானல் முறையாக அணியப்பட்ட ஆசனப்பட்டிகளால் தங்கள் காயங்கள் பெருமளவில் குறையும். இதே காரணத்திற்காக, தங்கள் குழந் தையை பின் ஆசனத்தில், விசேடமாக, முறையாகப் பொருத்தப் பட்ட சிறுவர் பாதுகாப்பு இருக்கையில் கொண்டு செல்லுங்கள். எப்பொழுதும் சாரதியின் இருக்கையைத் தங்களுக்கேற்ற விதத்தில் சரிசெய்து கொள்ளல் வேண்டும்.

28. மோட்டார் சைக்கிள்கள் ஓட்டுவோர் அங்கீகரிக்கப்பட்ட தலைக்கவசம் அணிதல் வேண்டும். வெள்ளைத் தலைக்கவசமும் மென்னிற ஆடையும் பார்வை குறைவான வேளைகளில் தங்களைத் தெளிவாகக் கண்டு கொள்ள உறுதுணையாயிருக்கும்.

29. வாகனத்தை செலுத்துமுன், தங்கள் வாகனத்தில் ஆசனப்பட்டிகள் பொருத்தப்பட்டிருப்பின் அவற்றை அணிந்து கொள்ளுங்கள். பின் பக்கத்தோற்றக் கண்ணுடியில் சரிபார்த்து வலது தோளின் மேலாக வும் பாருங்கள். தேவையெனில் சைகையைக் காட்டி ஏனைய வாகனங்கள் அதன் வேகத்தை மாற்றவோ செல்லும் வழியை மாற்றவோ இடமளிக்காது பாதுகாப்பானதென அறிந்த பின்னர் மட்டுமே வாகனத்தை எடுங்கள்.

30. ஆபத்து வெளிச்சம், தங்கள் வாகனம் இயங்காமலிருப்பதைக் காட்டுவதற்கு மட்டுமே உபயோகிக்கப்படல் வேண்டுமே தவிர முன்னுரிமை கோருவதற்கு உபயோகிக்கப்படலாகாது. வாகனம் நிலையாயிருக்கும் பொழுது மட்டுமே இவை உபயோகிக்கப்படல் வேண்டும். விட்டுவிட்டெரியும் முகப்பு வெளிச்சங்கள் தாங்கள் இருப்பதனை மட்டுமே குறிப்பிடுமே தவிர தங்களுக்கு முன்னுரிமை தரமாட்டாது.

31. பாதுகாப்பான வேகத்தில் வீதிக்கும் போக்குவரத்து நிலைமைகளுக்கும் பாதுகாப்பாகவும், அவ்வீதியில் தங்கள் வாகனத்திற்குப் பொருத்தமான வேகத்திற்குள்ளும் வாகனத்தைச் செலுத்துங்கள். பாதுகாப்பு நோக்கங்களுக்காக வேகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. பொதுவான வேகக் கட்டுப்பாடுகளாவன :

மோட்டார் கோச்சுக்களும் லொறிகளும் :

நகரசபைப் பகுதிகளுக்குள் — மணிக்கு 50 கி. மீ.
நகரசபைப் பகுதிகளுக்கு வெளியே — மணிக்கு 60 கி. மீ.

மோட்டார் முச்சக்கர வாகனங்களும் மோட்டார் முச்சக்கர வான்களும் :

எப்பெருந் தெருவிலேனும் — மணிக்கு 40 கி. மீ.

விவசாய உபயோக வாகனங்கள்

எப்பெருந் தெருவிலேனும் — மணிக்கு 40 கி. மீ.

மோட்டார் கார்கள், மோட்டார் சைக்கிளும் மேலே குறிப்பிடப்படா வாகனங்களும்

நகரசபைப் பகுதிகளுக்குள் — மணிக்கு 50 கி. மீ.
நகரசபைப் பகுதிகளுக்கு வெளியே — மணிக்கு 70 கி. மீ.

32. இடையூறுகள் இல்லை என்பதனைப் பார்ப்பதற்குப் போதிய தூரத்துக்குத் தங்கள் வாகனத்தைத் தாங்கள் நிற்பாட்டக் கூடியதாயிருத்தல் வேண்டும் என்பதுடன் உங்களுக்கு முன்னால் செலலம் சாரதி திடீரென தனது வாகனத்தை நிற்பாட்ட வேண்டி ஏற்படின் தங்கள் வாகனத்தைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்குப்போதுமான தூரத்தை வைத்திருங்கள். நெரிசல் மிகுந்த நகரசபைப் பகுதிகளுக்குள் எப்போதும் வேகத்தைக் குறையுங்கள்.


33. பாடசாலைகள் (சைகை 26) பாதசாரிக் கடவைகள் (சைகை 74) சந்திகள், கூர்மையான மூலைகள், மேட்டுப் பகுதி, பாதுகாப்பில்லாத கடவைகள் என்பவற்றை அணுகும்போதும் வீதி ஈரமாயிருக்கும்

போதும் அல்லது பார்வை குறைவாயிருக்கும்போதும் விசேட கவனம் செலுத்துங்கள். குருடர்களிடமும் வலுவிழந்தோரிடமும் விசேட கவனம் செலுத்துங்கள்.



34. வாகனம் செலுத்தும்போது, அது தொடர்பான அவசியமான செயற்பாடுகள் செய்வது தவிர, ஏனைய வேளைகளில் எப்பொழுதும் இரு கைகளையும் செலுத்தும் சில்லில் அல்லது கைபிடிச்சட்டத்தில் வைத்திருங்கள் அப்போதுகூட ஒரு கையை செலுத்தும் சில்லில் வைத்துக்கொண்டு, சைகைகள் நேரத்துடனேயே கொடுக்கப்படல் வேண்டும். கைச் சைகைகள் தெளிவாகவும் கருத்துடனும் இருத்தல் வேண்டும். செயற்பாட்டின் பின்னர், விட்டுவிட்டெரியும் ஒளி நீக்கஞ் செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

35. நிறுத்தும் தூரமானது வேகத்துக்கு ஏற்ப அதிகரிக்கின்றது. ஓடிக் கொண்டிருக்கும் வாகனத்தை நிற்பாட்டுவதற்கு பிடிக்கும் தூரம் நாம் நினைப்பதிலும் பார்க்கக் கூடவாகும். எதிர்விளைவு நேரம் அல்லது நினைக்கும் நேரத்தை கீழேயுள்ள வரைபடம் காட்டுகின்றது.



36. வீதிகளில் பிறர் சௌகரியம் கருதாதவராயிருக்காதீர்கள். விரைவாகச் செல்லும் வாகனங்கள் தங்களை முந்திச் செல்லட்டும். மெதுவாகச் செல்லும் பாரிய வாகனங்களின் சாரதிகள் தகுந்த சந்தர்ப்பம் கிடைத்ததும், விரைவாகச் செல்லும் வாகனங்களுக்கு வழிவிடுவதற்காக மெதுவாகச் செலுத்த வேண்டும் அல்லது நிறுத்த வேண்டும்.

37. ஒலிக்கருவியை இயக்கிக் கொண்டே வாகனத்தைச் செலுத்தாதீர்கள். பஸ், சைக்கிள் ஒழுங்கைகள் இவ்வாகனங்களின் பாவனைக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன.

38. ஒளியூட்டப்பட்ட பகுதிகளில் தேவையின்றி தங்கள் முகப்பு வெளிச்சங்களை உபயோகிக்காதீர்கள். வீதியில் ஏனைய வாகனங்களைச் சந்திக்கும்பொழுது முகப்பு வெளிச்சங்களைப் பதிவாகப் பாய்ச்சுங்கள். தாங்கள் முந்திச் செல்லக் கருதாத இன்னோர் வாகனத்திற்கு அண்மையாகப் பின்தொடரும்போது, முகப்பு வெளிச்சங்களை அணைத்து விடுங்கள் அல்லது தணித்து எரியுங்கள். தங்கள் முகப்பு வெளிச்சங்கள் தணித்து எரிக்கப்படும்போது அல்லது அணைக்கப் பட்டிருக்கும்பொழுது விசேட கவனம் செலுத்துங்கள்.

39. அணுகும் வாகனங்களின் முகப்பு வெளிச்சங்கள் தங்கள் கண்களைக் கூசச்செய்யின் மெதுவாகச் செலுத்துங்கள் அல்லது நிறுத்துங்கள்.

40. ஒழுங்கைக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கவும் சீரான போக்குவரத்தையும் பெறுமதி வாய்ந்த தேசச் சொத்தின் ஆகக் கூடிய பாவனையையும் இது உறுதிப்படுத்துகின்றது.

41. தங்கள் கட்டுப்பாட்டை மீறிய சந்தர்ப்பங்களில் அல்லது விபத்தொன்றினைத் தவிர்க்கும்போது தவிர ஏனைய வேளைகளில் இரட்டை வெள்ளைக் கோடுகளைக் (சைகை 91) கடக்காதீர்கள்.

42. வலது பக்கம் திரும்புவதற்காக அல்லது விபத்தொன்றைத் தவிர்ப்பதற்காகவன்றி ஏனைய வேளைகளில் வீதியின் மத்தியில் அல்லது கிட்டத்தட்ட மத்தியில் அமைக்கப்பட்டுள்ள ஒற்றைத் தொடர் வெள்ளைக் கோட்டினை (சைகை 90) கடத்தல் ஆகாது.

43. சமமான இடைவெளிக் குறியீடுகள் கொண்ட உடைந்த வெள்ளைக் கோடு (சைகை 51) அல்லது இணைந்த பூனைக்கண்கள் (சைகை 89) எதிரெதிரான போக்குவரத்துக்கிடையே பிரிக்கும் கோட்டினை வழங்குகிறது. வருகின்ற வாகனப் போக்குவரத்தைத் தடுக்காத பட்சத்தில் மட்டுமே இக்குறியீடுகளின் ஏதாவதொன்றைக் கடக்கலாம்.

44. குறுகிய வெள்ளைக் குறியீடுகளும் நீண்ட இடைவெளியும் கொண்ட உடைந்த வெள்ளைக்கோடு (சைகை 92) ஒழுங்கைக் குறியீடாகும். வீதியானது, ஒழுங்கைக் குறியீட்டைக் கொண்டிருப்பின் தாங்கள் செல்லும் ஒழுங்கைக்குள் முழுதாக வாகனத்தை வைத்திருங்கள். குறைந்த வேகத்தில் தாங்கள் பயணஞ் செய்யின், நடைபாதைக் கருகேயுள்ள ஒழுங்கையைப் பாவியுங்கள். ஒழுங்கைக் குறியீட்டைப் பரவலாக்கியும் தேவையின்றி ஒழுங்கைக்கு ஒழுங்கை மாற்றியும் உபயோகிக்காதீர்கள். ஒரு ஒழுங்கையிலிருந்து இன்னோர் ஒழுங்கைக்குத் தங்களுக்குச் செல்ல வேண்டுமெனில், முதலில் கண்ணாடியைப் பாவித்து அவ்வாறு செல்வது பாதுகாப்பானதெனில், சைகையைக் காட்டி நகருங்கள். ஏனைய சாரதிகள் வேகத்தைக் குறைத்து செல்லும் வழியை மாற்ற நிர்ப்பந்திக்காதீர்கள்.

45. தாங்கள் செல்லும் ஒழுங்கையை விட்டு நீங்க தாங்கள் கருதின், சைகையைக்காட்டி வெளியே செல்லும் பொருத்தமான ஒழுங்கைக்கு நேரத்துடனேயே செல்லுங்கள். வீதிக் குறியீடு (சைகை 100) அல்லது வேறேதேனும் போக்குவரத்துச் சைகைகள் அல்லது சமிக்ஞைகள் ஆகியன எங்கெங்கு வழங்கப்பட்டிருப்பினும் இவற்றைப் பின்பற்றல் வேண்டும்.

46. நீண்ட வெள்ளைக் குறியீடுகளும் குறுகிய இடைவெளிகளும் கொண்ட உடைந்த வெள்ளைக் கோடு (சைகை 106) தாங்கள் போக்குவரத்தை அணுகுகின்றீர்களென்பதனைக் காட்டுகின்றது. வேகத்தைக் குறைத்து கூடிய கவனத்துடன் வாகனத்தைச் செலுத்துங்கள்.

47. அவ்வாறு செய்தல் பாதுகாப்பானதென்பதை உறுதிப்படுத்தினாலன்றி குறுக்குக் கோடுகளால் குறியிடப்பட்ட ஆபத்துப் பிரதேசங்களை (சைகை 195), (சைகை 96) அடையாதீர்கள். குறுக்குச் கோடுக் குறியீடானது, போக்குவரத்து தீவினை அல்லது சந்தியினைத் தாங்கள் அணுகுகின்றீர்களென்பதைக் காட்டுகிறது.


48. போக்குவரத்து நெரிசலில் பொறுமையாயிருங்கள். வரிசையினின்று தாவாதீர்கள். தங்கள் செயலானது போக்குவரத்துச் சிக்கலை மோசமாக்கும்.

49. வீதிச் சைகை (சைகை 74) வீதிக் குறியீடு (சைகை 83) ஆல் காட்டப்பட்டுள்ள பாதசாரிக் கடைவயில், சைகை (74) க்கு முன்னர் தாங்கள் நிறுத்துவதற்காக வேகத்தைக் குறையுங்கள். பாதசாரிக் கடவையில் பாதசாரியொருவர் நிற்பின், சைகை (74) க்கு முன்னர் அல்லது வீதிக் குறியீடான (83) "வழிவிடலுக்கு" முன்னர் தாங்கள் வாகனத்தை நிறுத்தி, பின்னர் அக்கடவையை உபயோகிக்கும் பாதசாரியின் பாதுகாப்பைக் கவனத்திற்கொண்டு செலுத்தல் வேண்டும்.


சந்தி

50. பெரும்பான்மையான விபத்துக்கள் சந்திகளில் அல்லது ஊடறுக்கும் வீதிகளில் ஏற்படுகின்றன. சந்தியை ஊடறுக்கும் பாதசாரி வாகனப் போக்குவரத்து என்பன பற்றி விசேட கவனமாயிருங்கள். முன் செல்லல் பாதுகாப்பானதென்பதை உறுதிப்படுத்திய பின்னரே அவ்வாறு செய்யுங்கள். இடது பக்கம் அல்லது வலது பக்கம் திரும்பும் வாகனங்கள் நேராகச் செல்லும் வாகனங்களுக்கு வழிவிடல் வேண்டும்.


51. தாங்கள் சந்தியை அடைவதற்கு போதுமான நேரத்திற்கு முன்னரே தாங்கள் செல்லும் பாதையை தீர்மானித்து, கண்ணாடியில் சரிபார்த்து, தேவையெனில் சைகையைக் காட்டி, தாங்கள் பயணஞ் செய்யும் பக்கத்திற்குப் பொருத்தமான ஒழுங்கைக்குள் தங்கள் வாகனத்தை வைத்திருங்கள். அம்புக்குறி ஒழுங்கைக் குறியீடுகளையும் ஏனைய வீதிச் சைகைகளையும் சமிக்ஞைகளையும் பின்பற்றுங்கள். வரைபடங்கள் 1, 2, 3 ஆகியன சந்தியின் போக்குவரத்து நிலையினை எடுத்துக்காட்டுகின்றன.




வரைபடம் 1




வரைபடம் 2




வரைப்படம் 3

52. தாங்கள் நேராக முன்னே செல்ல எண்ணியுள்ளீர்களாயின், வீதியின் இடது பக்கத்தினைப் பாவியுங்கள். அல்லது தங்கள் திசையில் மூன்று ஒழுங்கைகள் உள்ள பெருந்தெருவில் தாங்களிருப்பின், மத்தியிலுள்ள ஒழுங்கையை உபயோகிக்கவும். வீதியின் மத்திக்கருகேயுள்ள ஒழுங்கை வாகனங்களை முந்திச் செல்லவும் வலது பக்கம் திரும்பும்

வாகனங்களுக்காகவும் அமைந்துளது. நடைபாதைக்கருகேயுள்ள ஒழுங்கை மெதுவாகச் செல்லும் வாகனங்களுக்கும் இடது பக்கம் திரும்பும் வாகனங்களுக்கும் அமைந்துள்ளது.

53. சந்தியைத் தாங்கள் அடையுமுன்னர், வழங்கப்பட்டுள்ள போக்கு வரத்துக் கட்டுப்பாடெதனையும் பின்பற்றி ஏனைய வீதி ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்து, பொருத்தமான ஒழுங்கைக்குள் வெளியே செல்லும் வீதிக்குச் செல்லுங்கள்.

54. இடது பக்கமாகத் தாங்கள் திரும்புமுன், இன்னோர் வாகனம் குறிப்பாக மிதி சைக்கிள் ஓட்டுபவர் அல்லது மோட்டார் சைக்கிள் செலுத்துபவர் தங்களை இடது பக்கமாக முந்திச் செல்லவில்லை என்பதை தங்கள் கண்ணாடி மூலம் உறுதிப்படுத்திய பின் நேரத்துடனேயே சைகையைகாட்டி, பாதுகாப்பு இடமளிக்கக்கூடிய அளவுக்கு இடது பக்கத்து அண்மைக்குச் செல்லுங்கள். நேரத்துடனேயே இடது பக்கமாக மாறுதல் தாங்கள் இடது பக்கம் திரும்ப உததேசித் திருப்பதை ஏனைய போக்குவரத்திற்கு உறுதிப்படுத்தும் வீதியிலுள்ள அம்புக்குறியீடுகள், இடது பக்கம் திரும்பும் வாகனங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஒழுங்கைகளை வழங்கும். வழங்கப்பட்டுள்ள போக்குவரத்துக் கட்டுப்பாடுகளெவற்றையும் கடைப்பிடியுங்கள். கட்டுப்பாடுகள் வழங்கப்படாத பட்சத்தில் ஏனைய வீதி ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்து, பொருத்தமான ஒழுங்கையில் வெளியே செல்லும் தங்கள் வீதிக்குக் கவனமாகச் செல்லுங்கள்.

55. வலது பக்கம் திரும்புவதற்கு முன்னே நேரத்துடன் கண்ணாடியில் சரி பார்த்து, அவ்வாறு செய்வது பாதுகாப்பானதென அறிந்ததும் சைகையைத் தெளிவாகக் காட்டி வீதியின் மத்தியின் இடது பக்கமாக அல்லது வலது பக்கம் திரும்பும் வாகனங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஒழுங்கைக்குள் செல்லவும். வழங்கப்பட்டுள்ள போக்குவரத்துக் கட்டுப்பாடுகளெதனதும் பணிப்புக்களைப் பின் பற்றுங்கள். எதிரேயிருந்து வரும் போக்குவரத்தின் பாதுகாப்பானதோர் இடைவெளி வந்தபின் பொருத்தமான ஒழுங்கையுள் வெளியே செல்லும் வீதிக்குச் செல்லுங்கள்.

56. தாங்கள் அணுகும் சந்தியானது வீதிச் சைகை அல்லது வீதிக் குறியீடு எதனாலும் குறிப்பிடப்படாதிருப்பின் அல்லது அது ஓர் சந்தியில்லாதிருப்பின், தாங்கள் மெதுவாகச் செலுத்தி அல்லது நிறுத்தி தங்கள் வலது பக்கமாக அணுகும் சகல வாகனப் போக்குவரத்திற்கும் வழிவிடல் வேண்டும். சந்தியில் இடது, வலது பக்கமாக வரும் வாகனப் போக்குவரத்திற்கு தாங்கள் வழிவிடல் வேண்டும்.

57. சந்தியில் "நிறுத்தப்படல்" வீதிச் சைகை (சைகை 68) குறுக்கூட்டு வீதிக் குறியீடு (85 அல்லது 102) வழங்கப்பட்டிருப்பின் தாங்கள் பெருவீதியை அணுகுகின்றீர்கள் என அர்த்தமென்பதுடன், பெரு வீதியின் அருகேயுள்ள வீதிக் குறியீடான குறுக்கூட்டுக் கோட்டில் (சைகை 85) நிறுத்தல் வேண்டும் அல்லது குறுக்கூட்டுக் கோடு கண்ணுக்குப் புலப்படாத பட்சத்தில் பெருவீதியில் "நிறுத்துதல் வேண்டும்".

58. சந்தியானது "வழிவிடல்" வீதிக் குறியீடு (சைகை 67), வீதிக் குறியீடு (சைகை 86) என்பவற்றுல் குறிப்பிடப்பட்டிருப்பின், பெருவீதிக்கருகேயுள்ள வீதிக்குறியீட்டுச் சைகையான உடைந்த கோடு, கண்ணுக்குப் புலப்படின், அக்கோட்டில் பெருவீதியின் சகல வாகனப் போக்குவரத்திற்கும் வழிவிடல் வேண்டும். அக்கோடு கண்ணுக்குப் புலப்படாதிருப்பின், பெருவீதியை அடையுமுன் அதன் சகல வாகனப் போக்குவரத்திற்கும் தாங்கள் வழிவிடல் வேண்டும்.

59. சந்தியில் வீதிச் சைகை (சைகை 66), குறுக்கூட்டு வீதிக் குறுக்கூடு குறியீடு (சைகை 87) அல்லது அந்த "வழிவிடல்" குறியீடு சந்தியை தாங்கள் அணுகுகின்றீர்களென்பது அர்த்தமாகும். வீதிக் குறியீடு (சைகை 87) அல்லது அந்த "வழிவிடல்" குறியீடு கண்ணுக்குப் புலப்படாதிருப்பின், சந்தியை அடையுமுன்னர், தங்கள் வலது பக்கத்திலிருந்து அணுகும் சகல வாகனங்களுக்கும் தாங்கள் வழிவிடல் வேண்டுமென்பதோடு மத்திய தீவை வலது பக்கமாகக் குறுக்கூடு செய்யவும் வேண்டும். (ஒழுங்கு விதி 51 இல் குறித்துரைக்கப்பட்ட வரைபடம் 2 ஐ பார்க்கவும்)


60. குறுக்கூட்டு நிறுத்தல் கோடானது (சைகை 84) பொலிஸ் உத்தியோகத்தரால் அல்லது போக்குவரத்து ஒளிச் சமிக்ஞைகளால் கட்டுப்படுத்தப்படும் சந்தியொன்றை தாங்கள் அணுகுகின்றீர்க ளென்பதை எடுத்துக்காட்டுகின்றது. வீதிச் சைகை (சைகை 20) போக்குவரத்து ஒளிச் சமிக்ஞைகளால் கட்டுப்படுத்தப்படும் சந்தியை தாங்கள் அணுகுகின்றீர்களென்பதை எடுத்துக்காட்டுகின்றது.

61. நிறுத்துமாறு பொலிஸ் உத்தியோகத்தரால் அல்லது போக்குவரத்து ஒளிச் சமிக்ஞைகளால் தாங்கள் கட்டுப்படுத்தும் போது குறுக்கூட்டுக் கோட்டுக்கப்பால் (சைகை 84) தாங்கள் செல்லக்கூடாது. பொலிஸ் உத்தியோகத்தரால் அல்லது போக்குவரத்து சமிக்ஞைகளால் கொடுக்கப்படும் பணிப்புக்களைத் தாங்கள் எப்போதும் பின்பற்றல் வேண்டும். பொலிஸ் உத்தியோகத்தர் இல்லாத பட்சத்தில் அல்லது அந்நேரத்திற்கு போக்குவரத்து ஒளிச் சமிக்ஞைகள் இயங்கா விடத்து, குறுக்கூட்டுக் கோட்டில் (சைகை 84) தாங்கள் நிறுத்தி, தங்கள் வலது பக்கமிருந்துவரும் சகல போக்குவரத்திற்கும் தாங்கள் வழிவிடல் வேண்டும்.

62. சந்தியானது போக்குவரத்து ஒளிச் சமிக்ஞைகளால் கட்டுப்படுத்தப் படின், குறுக்கீட்டைச் சேராக்குவதை இடையூறென்று தடுக்குமெனில் பச்சை சமிக்ஞைக்கேற்ப தாங்கள் முன்செல்ல வேண்டாம். சிவப்பும் செம்மஞ்சளும் ஒன்றாகக் காட்டப்படும் பொழுது தாங்கள் சந்தியை அடைதலாகாது. அம்புக்குறியில் காட்டப்படும் பக்கம் நோக்கிச் செல்லத் தாங்கள் உத்தேசித்தாலன்றி பச்சை அம்புக்குறியால் ஒழுங்குபடுத்தப்படும் குறிப்பிடப்பட்ட ஒழுங்கையினை தாங்கள் அடைதலாகாது.

63. குறுக்கூட்டுக்கோடு (சைகை 84) கண்ணுக்குப் புலப்படாதவிடத்து, பொலிஸ் உத்தியோகத்தரால் பணிக்கப்படும் பட்சத்தில் அல்லது தங்களை முன்னோக்கியுள்ள போக்குவரத்து ஒளிச் சமிக்ஞை களினருகே முன் போக்குவரத்து ஒளிச் சமிக்ஞைகளால் நிறுத்தும்படி பணிக்கப்படுமிடத்து குறுக்கீட்டை அடையுமுன்னர் தாங்கள் நிறுத்தல் வேண்டும்.


64. போக்குவரத்தை ஒழுங்குபடுத்த போக்குவரத்து ஒளிச் சமிக்ஞைகள் உபயோகிக்கப்படும் பொழுது :—




(1) சிவப்பு.— நிறுத்தல் வேண்டும் என்பது அர்த்தமாகும். அத்துடன் வண்டிப்பாதையின் நிறுத்தல் கோட்டின் பின்னே நிற்பாட்டல் வேண்டும்.




(2) சிவப்பும் செம்மஞ்சளும் ஒன்றாயிருத்தல்.— நிற்பாட்டல் வேண்டும், ஆனால் பச்சை வெளிச்சம் வந்ததும் நகர ஆயத்தமாயிருங்கள் என்பதைக் காட்டுகிறது.




(3) செம்மஞ்சள்.— நிறுத்தல் வேண்டும். சிவப்புக்கான மாற்றம் ஏற்படப்போகின்றதென அர்த்தம்.




(4) பச்சை.— பச்சை ஒளியை முன்னோக்கியுள்ள வாகனங்கள் நேராக முன் செல்லலாம் அல்லது பாதுகாப்பானதெனில் இடது பக்கம் அல்லது வலது பக்கம் திரும்பலாம் என்பதைக் காட்டுகிறது.



(5) பச்சை அம்புக்குறி.— சிவப்பு சமிக்ஞையுடன் காட்டப்படும் பொழுது, அம்புக்குறியினுல் காட்டப் படும் பக்கத்தில் வாகனங்களைச் செல்ல அனுமதிக்கின்றது.



(6) விட்டுவிட்டெறியும் செம்மஞ்சள்.— சந்தியில் வாகனப் போக்குவரத்து, தற்காலிகமாக போக்கு வரத்து ஒளிச்சமிக்ஞைகளால் கட்டுப்படுத்தப்படு வதில்லை. சாதாரண சந்திக்குப் பொருத்தமான வீதி ஒழுங்கு வீதிகளை போக்குவரத்து பின்பற்றும்.



(7) விட்டுவிட்டெரியும் சிவப்பு.— மாறி மாறி விட்டெரியும் சிவப்பு வெளிச்சமானது புகையிரதக் கடவைகளிலும் தீயணைப்பு நிலையங்கள் போன்றவற்றிலும் வழங்கப்பட்டுள்ளது. அவை விட்டுவிட்டெரியின் தாங்கள் "நிறுத்தல்" வேண்டும். மேலே சொல்லப் பட்ட சமிக்ஞைகளை தாங்கள் கடுமையாகப் பின்பற்றல் வேண்டும்.

65. சந்திப் பெட்டியைக் காட்டும் மஞ்சள் வீதிக் குறியீட்டினுல் (சைகை 108) உம் (சைகை 109) உம் குறுக்கீடு குறிப்பிடப்பட்டிருப்பின், தாங்கள் வெளியே செல்லும் வீதி இடையூறின்றி இருந்தாலன்றி அப்பெட்டியைத் தாங்கள் அடைதல் ஆகாது. வலது பக்கம் தாங்கள் திரும்ப உத்தேசித்து, ஏனைய நிலையான வாகனங்களினுல் தடை செய்யப்படுமிடத்து மட்டுமே, பெட்டிக்குள் நிலையாக இருக்கமுடியும்.

முந்திச் செல்லல்

66. ஏனைய போக்குவரத்தினைத் தடைசெய்யாத வகையிலும் தங்களுக்கும் அல்லது ஏனையோருக்கும் ஆபத்தை உண்டுபண்ணுத வகையிலும் முந்திச் செல்லல் முடியுமென்ருலன்றி ஏனைய வேளைகளில் முந்திச் செல்லலாகாது. இரவில் பெருமழையில் அல்லது மூடுபனியில் விசேட கவனமாயிருங்கள். தங்கள் பாதுகாப்புப் பற்றிச் செலுத்தும்பொழுது ஐயமிருப்பின், முந்திச் செல்லாது ஏனைய வாகனங்களைப் பின்தொடரவும்.

67. முந்திச் செல்லத் தாங்கள் தொடங்குமுன், வீதி கண்ணுக்குப் புலப்படுகின்றதா என்பதையும் இடையூறேதும் இல்லாதிருக்கின்றதாதென்பதையும் தங்களுக்கு முன்னேயுள்ள இடையூறற்ற வீதிப் பரப்புக்குள் மற்றைய வாகனத்தை தாங்கள் முந்திச் சென்று முடிக்க இயலுமென்பதை உறுதிப்படுத்துங்கள். தாங்கள் செலுத்துவதின் பாதுகாப்புப் பற்றிக் கண்ணுடியில் சரிபார்த்து, முந்திச் செல்லத் தீர்மானித்தவுடன் வலது பக்கம் திரும்பும் சைகையைக் காட்டுவதன்மூலம் தங்கள் நோக்கத்தினைத் தெளிவாக எடுத்துக் காட்டி, தாங்கள் முந்திச் செல்லும் வாகனத்தைக் கடந்து விரைவாகச் செல்லுங்கள்.

68. தாங்கள் முந்திச் சென்றுள்ள வாகனத்திற்கு எதிரே கூராகத் திரும்பியோ அல்லது அவ்வாகனத்தின் பாதையினின்று விலத்தும் வகையில் செயலாற்ருது, பாதுகாப்பானதென அறிந்தவுடன் இடது பக்கமாக அல்லது பொருத்தமான ஒழுங்கைக்குள் செல்லவும்.

69. தங்களுக்கு எதிரேயுள்ள வாகனம் வலது பக்கம் திரும்புவதாகச் சைகையைக் காட்டின் அல்லது இடது பக்கம் முந்திச் செல்வது பாதுகாப்பானதென உணர்த்தும் சந்தர்ப்பங்களிலல்லாது எப்பொழுதும் வலது பக்கமாகவே முந்திச் செல்லுங்கள்.

70. பின்வரும் இடங்களில் அல்லது அவற்றை அணுகும்போது முந்திச் செல்லாதீர்கள் :—

கூரான மூலை அல்லது வளைவு
மேட்டுப் பகுதி அல்லது பாலச் சந்தி
பாதசாரிக் கடவை
" முந்திச் செல்லல் ஆகாது " பகுதி
பெருமளவான பாதசாரிப் போக்குவரத்தினையுடைய நகர வீதி ஒடுங்கலாகும் பகுதி அல்லது ஒற்றை அல்லது இரட்டை வெள்ளைக் கோடுகளைக் கடக்கும் பொழுது.

71. முந்திச் செல்லப்படும்பொழுது வேகத்தை அதிகரிக்காதீர்கள். நகர்ந்து முந்திச் செல்பவர் விரைவாகக் கடக்க அனுமதியுங்கள்.

நிற்பாட்டுமிடம்

72. எப்பொழுதாயினும் தங்கள் வாகனத்தைத் தாங்கள் நிறுத்த விரும்பின் இயலுமானால் விதியினின்று நகர்த்தி அல்லது நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் நிறுத்துங்கள். எப்பொழுதும் நெருக்கடியான வீதிகளில் நிற்பாட்டுவதைத் தவிருங்கள். வண்டிப்பாதையில் நிற்பாட்ட வேண்டுமெனில் தங்கள் வாகனத்தை இயலுமானவரை வீதியின் இடது பக்கத்திற்கு அருகேயும் சமாந்தரமாகவும் வாகனப் போக்குவரத்து வரும் திசையின் பக்கமாகவும் நிறுத்துங்கள். ஏனையோருக்கு வசதியீனமாயிருப்பதைக் கூடுமானவரை தவிர்த்து வாகனத்தை நிறுத்துங்கள்.

73. வீதிச் சைகை (சைகை 77) முன்மதிக்கப்படும் நிறுத்துவதற்கான பகுதியைக் காட்டுகிறது. வீதிக் குறியீடுகள் அவ்வாறு காட்டுவதாயின் கோணத்தில் நிறுத்துவதற்குத் தாங்கள் வேண்டப்படுவீர்கள்.

74. தங்கள் வாகனத்தைத் தாங்கள் நிற்பாட்டுவதாயின், நிற்பாட்டுவதற்கான தடுப்புக்களை உறுதியாகப் பூட்டி, இயந்திரத்தை இயங்காதவாறு செய்யுங்கள். வாகனத்தைக் கவனிக்காது விட்டுச் செல்வதாயின் கவனமாகப் பூட்டுங்கள். நிற்பாட்டுவதற்கான இடத்தில் ஒழுங்கான முறையில் தங்கள் வாகனத்தை நிறுத்துங்கள்.

75. வளைவின் மேட்டுப் பகுதியில் அல்லது பாலத்தில், வீதி ஒடுங்கலாகும் பகுதியில் அல்லது வீதிப் பாவனைப் பொருட்கள் அல்லது கிடைக்கும் வீதி, அகலத்தினைக் குறைக்கும் வீதி, பாவனைப் பொருட்கள் அல்லது வேறேதும் வாகனம் அல்லது பொருள் உள்ள இடத்தில்.

ஒற்றை அல்லது இரட்டை வெள்ளைக் கோடுகள் உள்ளடக்கிய வீதிக் குறியீடுகளில் பக்க நடைபாதையில்,

பஸ் அல்லது சைக்கிள் ஒழுங்கையில் அல்லது வாடகைக்கார் நிறுத்துமிடத்தில் பஸ் தரிப்பு நிலையத்தின் 30 மீட்டருக்குள்

நெருப்பு அணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் குழாயிலிருந்து 15 மீட்டருக்குள்.

சந்தியிலிருந்து 25 மீட்டருக்குள்.

துரிதகதிப் பாதையில்

வாயில் அல்லது வெளியே செல்லும் வழிக்கெதிராக ;

நிறுத்தப்படலாகாது.

76. இரவில் எப்போதும் போக்குவரத்து வரும் திசையை நோக்கி நிறுத்துங்கள். பெருவீதியில் தாங்களிருப்பின், நிறுத்தப் படுவதற்கான விளக்கை எரியவிடுங்கள்.

77. நிற்பாட்டுவதைத் தடுக்கும் அல்லது கட்டுப்படுத்தும் சைகைகள், சைகைகள் (45), (46), (47), (48) என்பவற்றில் குறித்துரைக்கப் பட்டுள்ளன. வீதிச் சைகைச் சட்டங்கள் (சைகைகள் 51, 52 அத்துடன் 53) பொருத்தமான வீதிச் சைகைகளில் அடங்கியுள்ள திசை, பகுதி, எல்லைகள் என்பவற்றைக் காட்டுகிறது. எப்போதும் இவ்வறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

பின்பக்கமாகச் செலுத்துதல்

78. பின்பக்கமாகச் செலுத்தும்போது தங்கள் பார்வை ஒரு பக்கமாகத் தடைப்பட்டிருப்பதால், விசேட கவனமெடுங்கள். சிறு வீதியிலிருந்து பெருவீதிக்கு ஒருபோதும் பின்னல் செலுத்திச் செல்லாதீர்கள். தேவையானதிலும் பார்க்க கூடுதலாகப் பின்னல் செலுத்திச் செல்லாதீர்கள்.

கோளாறுகளும் விபத்துக்களும்

79. வாகனத்தில் ஏதாவது கோளாறு ஏற்படின் அல்லது விபத்துக் குள்ளாயின், கூடிய விரைவில் வீதிப் பாதையிலிருந்து தங்கள் வாகனத்தை எடுங்கள். தாங்கள் விபத்துக்குள்ளாயின் தடையெதனையும் நீக்க வாகனத்தை நகர்த்துமுன் தங்கள் வாகனத்தின் நிலையைக் குறித்துக்கொள்ளுதல் உசிதமானது.

80. வீதிப் பாதையிலிருந்து தங்கள் வாகனத்தை நகர்த்த முடியாதெனில் விசேடமாக போக்குவரத்து நெருக்கடியை ஏற்படுத்துமெனில் வாகனத்தில் நிறுத்தப்படுவதற்கான விளக்குகள் அல்லது ஆபத்து எச்சரிக்கை விளக்குகள் பொருத்தப்பட்டிருப்பின், அவற்றை எரிய விட்டு, வாகனத்தின் பின்னே 50 மீட்டர் தூரத்துள், அணுகும் போக்குவரத்தை நோக்கி, ஆபத்து எச்சரிக்கைக் கருவியை (சிவப்பு தெறிகருவி முக்கோணி) பொருத்துங்கள். இரவில் நிறுத்துவதற்கான விளக்குகளை அல்லது ஆபத்து விளக்குகளை எரியவிடவும்.

81. வாகனக் கோளாறு அல்லது விபத்து மோட்டார் வீதியில் ஏற்பட்டிருப்பின் ஏனைய வாகனப் போக்குவரத்து பற்றி விசேட கவனமெடுக்கவும். அத்தகையதோர் சூழ்நிலையில், இடையூறுக்குமுன் 150 மீட்டர் தொலைவில் எச்சரிக்கை கருவியை வைக்கவும். கூடிய விரைவில் அவ்விடத்திலிருந்து ஆபத்தை நீக்குவதற்கு சகல முயற்சிகளையும் எடுங்கள்.

82. மோட்டார் வாகனமொன்றின் சாரதியாக அல்லது ஓட்டுபவராக தாங்கள் விபத்துக்குள்ளாயின்

(அ) உடனடியாக வாகனத்தை நிறுத்துங்கள் ;

(ஆ) தங்கள் பெயரையும் முகவரியும் ;
வாகனத்தின் உடமையாளரின் பெயர், முகவரி ;
வாகனத்தின் தெளிவான இலக்கம்
என்பவற்றினைப் பின்வருவோர் கோரும் பட்சத்தில் கொடுத்தல் வேண்டும் :—.

(i) பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது கிராம சேவையாளர் ;

(ii) காய மேற்படுத்தப்பட்ட எந்த நபராயினும் அல்லது ;

(iii) காயம் அல்லது சேதமேற்படுத்தப்பட்ட சொத்தின் அல்லது மிருகத்தின் உரிமையாளர் அல்லது அதற்குப் பொறுப்பானவர்.

(இ) காயமுற்ற எந்நபரும் கோரும் பட்சத்தில் அல்லது அவர் நினைவிழந்திருப்பின் அல்லது விபத்தின் விளைவாகக் காயமுற்ற நபரின் உயிர் ஆபத்திலுள்ளதென தாங்கள் கருதின் உடனடியாக அருகேயுள்ள வைத்தியசாலைக்கு அவரை எடுத்துச் செல்லவும்.

(ஈ) காயமுற்ற நபரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதில் தாமதமேதாவது ஏற்பட்டாலொழிய, இவ்விபத்துப் பற்றி அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கவும்.

(உ) நபரொருவர் காயமுற்றின், காப்புறுதி அல்லது பாதுகாப்புப் பத்திரத்தைப் பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது கிராம சேவையாளர் அல்லது காயமுற்ற நபர் அல்லது காயமுற்ற நபரின் சார்பாகவுள்ள நபர் கோரும் பட்சத்தில்

சமாப்பிக்கவும். அவ்வாறு செய்யத் தாங்கள் தவறின், தாமதிக் காது அருகேயுள்ள பொலிஸ் நிலயத்திற்கு அதனைச் சமர்ப் பிக்கவும்.

83. தாங்கள் உரிமையாளராயுள்ள மோட்டார் வாகனம் விபத்துக்குட் படின் விபத்து நடந்த வேளை தாங்கள் இருப்பினும் அல்லது இல்லாதிருப்பினும் பொலிஸ் உத்தியோகத்தரொருவர் அல்லது கிராம சேவையாளரொருவர் கோரும் பட்சத்தில், பெயர், முகவரி, விவரணம், வாகனத்தின் சாரதி எங்குள்ளார் போன்ற விபரத்தையும் விபத்தின்போது வாகனத்திலிருந்த ஒவ்வோர் நபரின் விபரத்தையும் கொண்ட சகல தகவல்களையும் கொடுத்தல் வேண்டும்.

84. தாங்கள் பயணஞ் செய்த மோட்டார் வாகனம் விபத்துக் குள்ளாயின்—

(அ) தங்கள் பெயரும் முகவரியும் ;

(ஆ) வாகனச் சாரதியின் பெயர், முகவரி ;

(இ) வாகனத்தின் உரிமையாளரின் பெயர், முகவரி ;

(ஈ) வாகனத்தின் தெளிவான இலக்கம் என்பவற்றை :

(i) பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது கிராம சேவையாளர்

(ii) காயமேற்படுத்தப்பட்ட எந்நபராயினும், அல்லது

(iii) காயம் அல்லது சேதமேற்படுத்தப்பட்ட சொத்தின் அல்லது மிருகத்தின் உரிமையாளர் அல்லது அதற்குப் பொறுப் பானவர் ;

கோரும் பட்சத்தில் கொடுத்தல் வேண்டும்.

85. அத்துடன், தாமதிக்காது தங்கள் பெயர், முகவரி, விபத்தின்போது தாங்கள் வாகனத்திலிருந்தமை பற்றிய விபரம் போன்றவற்றை பொலிஸ் நிலயமொன்றின் பொறுப்பதிகாரிக்குத் தெரிவிக்கவும்.

86. 1952 பெப்பரவரி 27 ஆம் தேதிய இலக்கம் 10,360 அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதான மோட்டார் வாகன (பெரு வழிகள் சட்டக்கோவை) ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லா தொழிக்கப்படுகிறது.



நிறுத்துங்கள்



முன்னே வாருங்கள்



முன்னாலும் பின்னுமிருந்து வரும் வாகனங்களை நிறுத்துங்கள்



முன்னே வாருங்கள்



பின்னாலிருந்து வரும்
வாகனங்களை நிறுத்துங்கள்

# அபாய எச்சரிக்கைச் சைகைகள்



1
முன்னால் இடப்
பக்க வளைவு



2
முன்னால் வலப்
பக்க வளைவு



3
முன்னால் இடப்
பக்கமாக
இரட்டைவளைவு



4
முன்னால் வலப்
பக்கமாக
இரட்டைவளைவு



5
முன்னால் வலப்
பக்கமாக கொண்டை
ஊசி வளைவு



6
முன்னால் இடப்
பக்கமாக கொண்டை
ஊசி வளைவு



7
இரட்டை வண்டிப்
பாதை முன்னால்
முடிவடைகிறது



8
வீதி முன்னால்
ஒடுங்குகிறது



9
முன்னால் குறுக்கு
வீதிகள்



10
முதலாவது பக்கவீதியை
இடப் பக்கமாகக் கொண்டு
அடுத்தடுத்து வரும் சந்தி



11
முதலாவது பக்க வீதியை
வலப்பக்கமாகக்
கொண்டு அடுத்தடுத்து
வரும் சந்தி



12
'T'' சந்தி
முன்னால்




13
மூன்று வீதிகளின்
சந்தி முன்னால்



14
இடமிருந்து வரும்
வாகனம் முன்னால
இணைகிறது



15
வலமிருந்து வரும்
வாகனம் முன்னால்
இணைகிறது



16
ஒடுக்கமான பாலம்
முன்னால்



17
முன்னால்
நிறுத்தவும்



18
முன்னால் வழி
விடவும்



19
முன்னால் சுற்று
வளைவு



20
முன்னால் ஒளிச்
சமிக்கைகள்



21
அபாயகரமான
சரிவு முன்னால்



22
அபாயகரமான
ஏற்றம் முன்னால்



23
வழுக்கும் வீதி
முன்னால்



24
முன்னால் கற்
பாறைகள் விழும்




25
முன்னால் பாதசாரிகள்
கடவை



26
முன்னால் சிறுவர்
கடவை



27
முன்னால் பாதை
வேலை



28
பாதுகாப்புடைய புகை
யிரதக் கடவை
முன்னால்



29
பாதுகாப்பற்ற புகை
யிரதக் கடவை
முன்னால்



30
வசுவண்டி ஒழுங்கை
முன்னால்



31
துவிச்சக்கர வண்டி
ஒழுங்கை முன்னால்



32
துவிச்சக்கர வண்டிக்
கடவை முன்னால்



33
மந்தை அல்லது வேறு
விலங்கு முன்னால்
பாதையைக் கடக்கக்
கூடும்.



34
ஓடத்துறை
ஒன்றிலுள்ள
வீதி முன்னால்

# ஒழுங்குபடுத்தும் சைகைகள்

## தடைசெய்யும் சைகைகள்


35
வாகனம் செல்லத் தடை


36
இடப்பக்கம் திரும்பத் தடை


37
வலப்பக்கம் திரும்பத் தடை


38
'U' முடக்குத் திரும்பத் தடை


39
முந்திச் செல்லத் தடை


40
ஒலி எழுப்பத் தடை


41
சகல வாகனங் களுக்கும் வீதி மூடப்பட்டுள்ளது


42
பசு வண்டிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது


43
லொறிகளுக்கு வீதி மூடப்பட்டுள்ளது


44
மோட்டார் வாகனங் களுக்கு வீதி மூடப்பட்டுள்ளது


45
வாகனங்கள் நிறுத்தக் கூடாது


46
வாகனங்கள் நிறுத்தவும் தரிக்கவும் கூடாது



47
ஒற்றை நாட்களில் வாகனங்கள் நிறுத் தக் கூடாது


48
இரட்டை நாட்களில் வாகனங்கள் நிறுத்தக் கூடாது

## மேலதிகச் சட்டங்கள்




49




50



51



52



53

## மட்டுப்படுத்தும் சைகைகள்




54
அகலத்தின் வரையறை




55
உயரத்தின் வரையறை




56
எடையின் வரையறை




57
ஓர் அச்சாணி மீது எடையின் வரையறை




58
வேகத்தின் வரையறை



59
வேகத்தின் வரையறை முடிவு

## கட்டாயச் சைகைகள்



60

இடப்பக்கம்
திரும்பவும்



61

வலப்பக்கம்
திரும்பவும்



62

நேரே செல்லவும



63

முன்னால் இடப்
பக்கம் திரும்பவும்



64

முன்னால் வலப்
பக்கம் திரும்பவும்



65


இந்தப் பக்கம்
செல்லவும்



66

கட்டாயச்
சுற்றுவட்டம்

## முந்துரிமைச் சைகைகள்




67

வழி விடவும்





68

நிறுத்துக




69

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை



70

முந்துரிமை வீதி




71

முந்துரிமை முடிவு



72

முன்னால் வரும்
வாகனத்துக்கு
முந்துரிமை



73

முன்னால் வரும்
வாகனத்தின் மீது
முந்துரிமை

## சாரதிகளுக்குப் பயனுள்ள வேறு சைகைகள்




74

பாதசாரிகள் கடவை



75

ஒரு திசை வழி



76


ஆசுப்பத்திரி






77

வாகனம்
நிறுத்துமிடம்




78

வசுவண்டி
தரிப்பிடம்



79

வசுவண்டி மட்டும் செல்லும் ஒழுங்கை
ஆரம்பம் / தொடர்ச்சி



80

வசுவண்டி மட்டும் செல்லும்
ஒழுங்கை முடிவு



81

துவிச்சக்கரவண்டி மட்டும்
செல்லும் ஒழுங்கை
ஆரம்பம்/தொடர்ச்சி




82

துவிச்சக்கரவண்டி மட்டும்
செல்லும் ஒழுங்கை முடிவு


## வீதியிற் குறியீடுகள்

### பாதசாரிகள் கடவை





83

வரிகளினுல் கட்டுப்படுத்தப்படும் இடப்பரப்பின் எல்லைகள்



84

போக்குவரத்துச் சமிக்ஞை
களில் அல்லது பொலிஸ்
கட்டுப்படுத்தும் குறுக்
கூட்டில் நிறுத்தக்கோடு



85

'நிறுத்துக' சைகையில்
நிறுத்தக் கோடு



86

'வழிவிடவும்' கோடு



87

சுற்றுவட்டத்தில் வழி
விடவும் கோடு



88

நடுக்கோட்டு சைகைக் குறியீடு



89

குமிழ்கள்
(அல்லது பூனைக்கண்கள்)
இணைந்த நடுக்கோடு



90

வலப்பக்கம் திரும்புவதற்குத் தவிர குறுக்கீட்டைத் தடை செய்யும் நெடுங்கோடு



91

குறுக்கீட்டைத் தடை செய்யும் நெடுங்கோடு.




92

ஒழுங்கைக் குறியீடு




93

வளைவொன்றில் வண்டிப் பாதையின் ஓரத்தைக் காட்டும் நெடுங்கோடு




94

வாகனங்கள் நிறுத்தப் படுவதைத் தடை செய்யும் அல்லது மட்டுப்படுத்தும் வண்டிப்பாதை ஓரத்தின் குறியீடு

ஆபத்து பகுதி



95

எதிர்த்திசையிலான
வாகனப்
போக்குவரத்து



96

ஒரே திசையிலான
வாகனப்
போக்குவரத்து




97

வாகனங்களுக்குக் கட்டாய
இடப்பக்கத்
திருப்புகையைக் காட்டுவதற்கு




98

வாகனங்கள்
கட்டாயமாக
நேராகச்
செல்ல வேண்டும்
என்பதனை
காட்டுவதற்கு




99

வாகனங்களுக்கு
வலப் பக்க
கட்டாயத் திரும்பு
கையைக் காட்டுவதற்



100

வாகனங்களுக்குத்
தோதான
ஒழுங்கைகளைக் காட்டுவதற்கு

SLOW

101

முன்னால் நிகழக்கூடிய
அபாயத்தைக் காட்டுவதற்கு

STOP

102

'நிறுத்துக' 68 சைகையையும்
என்ற கோட்டுப் படத்தில் தரப்பட்ட
விதி அடையாளக்குறியீட்டையும் 85
கொண்ட வீதிச் சந்தியொன்று
எதிர்ப்படுவதைக் காட்டுவதற்கு.

BUS
LANE


103

வசுவண்டி ஒழுங்கை

CYCLE
LANE

104

துவிச்சக்கர வண்டி ஒழுங்கை




105

துவிச்சக்கரவண்டிக் கடவை




106

அபாய எச்சரிக்கைக்
கோடு




107

பசுவண்டி அல்லது
துவிச் சக்கரவண்டி
ஒழுங்கை நிர்ணயம்



108

சந்திப் பெட்டி




109


சந்திப் பெட்டி

# தகவல்தரும் சைகைகள்


## முன்னரே நெறிப்படுத்தும் சைகைகள்




110




111




112

110க்கு மாற்று



113

வழியடைப் பலகை



114

(அம்புக்குறியானது வீதி மாறுபடும் திசையைக் காட்டும்)

மாற்று வழியடைப் பலகை

## திசைகாட்டும் சைகைகள்




115

இடமும் தூரமும்




116

இடமும் வகையும்

## இடத்தைக் காட்டும் சைகைகள்




117


நிர்மாணிக்கப்பட்ட இடப்பரப்பொன்றின் ஆரம்பம்




118

நிர்மாணிக்கப்பட்ட இடப்பரப்பொன்றின் முடிவு


## உறுதிப்படுத்தும் சைகைகள்




119

தூரத்தை உறுதிப் படுத்துதல்

## பாதசாரிகளுக்கு ஒளிச் சமிக்ஞைகள்



120

**சிவப்பு நிற மனிதன்**



121


**பச்சை நிற மனிதன்**

Thilakoo2@yahoo. c

Mon or Tue.

350/= L Board

17 counter




விலை ரூபா 25.00

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்